100

Parents & Children

BY

PANDIT M. M. NARAYANASAMI AIYAR.

SRI BALASUBRAMANYAM & Co,.
Book-sellers and Publishers,
Triplicane, Madras.

[*Price 1 Anna.*

R34
X15
177054

. A. P. WORKS TRIPLICANE

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை.

பெற்றோரும் பிள்ளைகளும்.

"அரிதரிது மானிடராதலரிது" என்றனர் ஆன்றோர். ஆதலின், நாம் பெற்றுள்ள இம்மானிட சரீரம் மிகச் சிறந்ததாம்; எப்படி?

இது நல்லது; இது தீயது; இது செய்யத்தக்கது; இது செய்யத்தகாதது என நன்மை தீமைகளை விளக்கத்தக்க பகுத்தறிவு நமக்கேயுண்டு. ஏனைய ஜீவராசிகளுக்கு அஃதில்லை; இதுபற்றியேயாம்.

இம்மானிடரிலும் சிலர் மிருகப்பிராயமாக இருப்பதுண்டு. இங்ஙனம் மாறுபடுவது முன்செய்த பாபபுண்ணிய பலனாமெலன்பர் அறிவுடையார். பாப புண்யங்கள் நமது செய்கையினின்றே யேற்படுவன. ஆதலின் நாம் செய்யவேண்டியவற்றைத் தீர ஆலோசித்துச் செய்தல் வேண்டும். இவ்விதம் ஒருவன் தன் காரியங்களைச் செவ்வனே செய்து தனக்கும் பிறர்க்கும் நல்லவனாக நடந்து வருவதற்கு நல்லினஞ்சேர்தலே காரணமாகும்.

ஒவ்வொரு மனிதனும் பூமியிற் பிறந்தது முதல் வெகுநாள் வரை பழகிவருவது அவனது குடும்பமே யாகும். அவனிடம் பழகுபவர்கள் பெற்றோர்களேயாவர். பெற்றோரும் உற்றோரும் அவனது ஆயுளையும் நடத்தையையும் உருவாக்குவோராவர். மற்றும் அவனுடைய இவ்வுலகவாழ்

விற்கே காரணபூதராய் நிற்பவர் பேற்றோர்களாவர். ஆதலின், பெற்றோருடையவும், மக்கள்களுடையவும், பெருமையையும் கடமையையும் கவனிப்பது அத்தியாவசியமாம்.

மனிதன் இவ்வுலகில் பிறப்பதற்குக் காரணம் பலவுள. அவன் பிரஜாவிர்த்தியைச் செய்யவேண்டுமென்பது மிக்க அவசியமென நமது பண்டை நூற்கள் கூறுகின்றன. ஏனெனின், மக்களைப் பிறப்பித்தல் முதலியவற்றை ஒருவரும் செய்யாராயின், இவ்வுலகமே இல்லாமற் போகுமன்றோ? அவ்வாறு நேராமைக்கே அதனைச் செய்தல் வேண்டுமென நூற்கள் போதிக்கின்றன. இக்கருத்தையே "யேஷாம் லோகாநாம் ஸந்தத்யாயேவம் ஸந்ததாஹீமே லோகா:" என்னும் ஐதரேயோபநிஷத்வாக்கியம் உணர்த்துகின்றது. மேலும் மக்கட்பேற்றைப்பெருத ஒருவன் தன் குடும்பவிருத்தி செய்யாதவனாகின்றான். அதனால் "பும்" "புத்" என்னும் நரகினுள் வீழ்கின்றனன். முடிவில், இறந்த அவனது மூதாதைகளும் தமது வம்சம் அற்றுப்போவதை யெண்ணித் துன்புறுவராவர் என்று பெரியோர் கூறுகின்றனர். ஆதலால் புத்திரப் பேறு மனிதனுக்கு மிகச் சிறந்தது. இதுபற்றியே பொய்யாமொழிப் புலவரும் "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்லபிற" என மக்கட்பேற்றைச் சிறப்பித்துக் கூறினர். அஃதே என்றும் குறைவுபடாத செல்வமாம்.—

77054

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"

என்னும் போதனையும் இங்கு உணரத்தக்கது. இவ்வளவு பெருமையுடைய மக்கட்பேற்றை யடைந்தவர்தம் கடமைகள் யாவை யெனச் சற்று ஆராய்வோம்.

பெற்றோர்களெவ்வழியோ அவ்வழியே மக்களும் நடப்பர். இதனைப்ரத்யக்ஷத்திலும் பார்க்கின்றோம். ஆதலின் தம் மக்கள் அன்பும் அடக்கமுமுடையவராய், தயைதாக்ஷண்யம் முதலிய நற்குணங்கள் அமையப் பெற்று செய்ந்நன்றி மறத்தல் முதலிய பாதகங்கள் ஒழிந்தவராய், யவராலும் நல்லாரெனப் பேசப்படும் யோக்கியதையைப் பெறுமவர்களாயிருக்க விரும்பும் பெற்றோர், தாமும் மேற்கூறிய குணங்கள் பொருந்தியவராயும் தீக்குணங்கள் ஒழிந்தவராயு மிருத்தல் வேண்டுமென்பது இன்றியமையாததாம்.

> "செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
> செந்நெல்லே யாகி விளைதலா—லந்நெல்
> வயனிறையக் காய்க்கும் வளவய லூர
> மகனறிவு தந்தை யறிவு."

என்றபடி நல்ல நெல் முளையினால் நல்ல நெல்விளைவது போன்று தந்தையின் நற்புத்தியால் மகனுக்கும் நற்புத்தியுண்டாகும். ஆதலின், மக்களைப் பெற்றவன், தான் எக்காரணம் பற்றியும் தீயவொழுக்கங்களிற் பிரவேசியாதிருத்தல் வேண்டும். மேலும் தன் குழந்தைகளுடன் பழகும் ஒவ்வொருவரும் தீயவழியில் பிரவேசியாதவர்களாயும், திரிகரணசுத்தர்களாயு மிருக்கின்றார்களா வென்பதையும் கவனிக்க வேண்டும். ஏனெனில் குழந்தைகளின் மனம் ஸ்படிகம்போல நிர்மலமாயிருக்கும். ஆதலின் அதனில் எதுவும் எளிதில் பதியும். அன்றியும் குழந்தைகளின் மனதை ஒரு புகைப்படத்திற்கு ஒப்பிடலாம். புகைப்படமானது தன் முன்னுள்ள எந்த வஸ்துவையும் அதனுடைய உண்மையான நிலையில் தன்னுள் பிடித்து வருகின்றது. அவ்வஸ்து நேராக நிற்கின்றதா ? அழகாயிருக்கின்றதா ? அல்லது அது நிற்கும் அந்நிலைமையில் நாம் பிடித்தல் தகுமா ? என்று சிறிதும் யோஜிப்பதில்லை. தன்னுடைய கருவியில் நல்ல

படம்பிடிக்கவிரும்பும் படம்பிடிப்போன், தனது யந்திரத்தை நல்ல இடத்தில் வைத்தோ அல்லது தான் படம்பிடிக்க விரும்பும் வஸ்துவை ஒழுங்கான இடத்தில் வைத்தோ சீர்படுத்தவேண்டும். ஆங்கும் முன்னிற்கும் உருவம் எந்த நிலைமையில் இருக்கின்றதோ அந்நிலையினையே படமும் பிடிக்கின்றது. ஆதலின் புகைப்படம் தன்னிஷ்டம்போல நன்மைகளைக்கொள்ளவும் தீமைகளைத் தள்ளவும் சக்தியற்றதாயிருக்கின்றது. அதுபோலவே குழந்தைகளின் மனமும் தான் காணும் மனிதர்களின் குணங்களையே சிறிதும் மாறுதலின்றிக் கொள்ளுகின்றது. அதற்கு நன்மை தீமை யுணரும் உணர்ச்சி யிருப்பதில்லை.

குழந்தைகளின் மனம் இத்தன்மையதாகவிருத்தலினால் அவர்களுக்கு அவர்களுடைய தாய்தந்தையர்களிடம் காணப்படும் குணங்களே ஸம்பந்திக்கின்றன. இதுபற்றியே "தாயைப்போலப்பிள்ளை", "தந்தையெவ்வழி மைந்தனவ்வழி" என முதுமொழிகளும் வழங்குகின்றன.

இவ்வாறிருக்கப் பெற்றோன் தீயோனாயிருக்க மைந்தன் நல்லோனாயிருப்பானேன்? தந்தை பண்டிதனாயிருக்க மைந்தன் பாமரனாயிருப்பானேன்? எனவினவின், அதற்குச் சமாதானம் இதுவாம். தன்பெற்றோருடைய தீயசெயலையும் தீய சொற்களையும் தீயநடத்தைகளையும், தீயகுணங்களையும் நேருக்கு நேராய்க் காணும்போது அவற்றைச் சகியாது நல்லோர்நட்பு, கல்வி, தெய்வ கிருபை முதலியவற்றினால் நல்ல அறிவு வளரப்பெற்ற மைந்தன், அவ்வப்போது சிந்தித்து ஆராய்ந்து பார்த்து அத்தீயவொழுக்கங்களை விலக்கி நல்லொழுக்கங்களையே மேன்மேலும் கைக்கொள்ள அவாக்கொண்டு விருத்தியடைகின்றான். நற்குணமமைந்தபெற்றோரிடம் உதித்தவர்கள் தீயோராவது யாங்ஙனமெனில், பெற்

றோர் தம்மக்கட்குத் தாம்செய்ய வேண்டிய கடமைகளைத் தகுந்தவாறு நிறைவேற்றாமையே முக்கிய காரணமாம். பிள்ளைகளைக் கல்வி கேள்விகளால் வளர்ப்பது உபாத்தியாயரின் கடமையென்பது பெற்றோர் பலருடைய எண்ணம். சிலர் உபாத்தியாயரை "நீர் இவனுக்கென்னபடிப்பித்தீர்? இவனுக்கு ஒரு புத்தகத்தைப் படிக்கவும் தெரியவில்லையே! வீட்டிற்சொல்வதையும் கேட்பதில்லை. இதுதானா நீர் படிப்பித்தீர்!" எனக் கேட்பதைக் காண்கின்றோம். பாடசாலை உபாத்தியாயரையே தம்மக்களின் ஒழுக்கங்களுக்காக முற்றும் நம்பியிருப்பது பெரும் பேதைமையேயாம். பிள்ளைகளுக்கு விசேஷபாடசாலை வீடேயாம். ஆதலின் பெற்றோர் தம்மக்கட்குக் கல்விபுகட்டும் விஷயத்திலும் ஒழுக்கப் பயிற்சி செய்வித்தலிலும் கவனியாவிடின்,—

> "அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையும் ஆதரவால்
> கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு மென்னைக் குறித்ததல்லால்
> துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
> பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே"

என்றபடி பின்னர், மக்கள் தம்மை யிகழ்ந்துபேசுதற் குரியவராவர்.

நம் தமிழ்நாட்டில் நாகரிகரெனப் பேசப்படுவோர் இக்காலத்தில் தம்மக்களை ஏதோ விளையாட்டுக் கருவிகளாக நினைத்து அவர்கட்குப் போலிப்படிப்பும் பாட்டும் கூத்தும் பழக்கிவைத்து அவற்றைக் கண்டுகளித்து வருகின்றனரே யன்றி, அவர்கள், நல்லொழுக்க நற்குண நற்செய்கைகளில் தேர்ச்சி பெறத்தக்க கல்விபெறுமாறு கவனஞ் செலுத்துகிறார்களில்லை. அதுமுற்றும் தீமைதருவதாகும்; நீதியுமாகாது. அந்தோ! தாம் மூப்படைந்து காலஞ்சென்றபின் தம்மக்களே பெரியவர்களாவரென்பதை அப்பெரியோர் அறியாத தென்னே!

தம்மக்கள் தீயவொழுக்கத்தைப்பற்றி யவர்களறிந் திருந்தபோதினும்,

"நாவி னுனியில் நயமிருக்கில் பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவர்—நாவினுனி
யாங்கடின மாகி லத்திருவுஞ் சேராள்முன்
ஆங்கே வருமரணமாம்"

என்றபடியும்,

"சிறுமையுணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்"

என்றபடியும், அவர்களை எப்பொழுதுங் கண்டியாமல் நயமாகச் சொல்லித் திருத்துதல் கூடாதகாரிய மென்றறிக. ஆதலின் அவர்களை அசட்டைசெய்து வழிக்குக்கொண்டுவர முயலாதொழிவது முழுமூடத்தனமாம்.

"எச்சமெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்லபிற"

என்றும்,

"தந்தைமகற் காற்றுநன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றும் கூறியுள்ளார் ஆன்றோர். ஆதலின் தந்தை தன்தனயனுக்குச் செய்யத்தக்க உதவிகளுள் மிகச்சிறந்தது அவனுக்குக் கல்வி பயிற்றுவித்து அவனை எச்சபையிலும் முந்தி யிருக்கும் வண்ணம் செய்யவேண்டியதேயாம். ஒவ்வொரு பெற்றோனும் தன் மகவை வாலிபப்பருவம் முதற்கொண்டே சீர்திருத்திக்கொண்டு வரவேண்டும். ஏனெனில் "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" நிற்குமன்றோ? மைந்தர்கள் சீர்குலைவதற்கு வாலிபப்பருவமே சிறந்த காலமாகும். அப்பொழுது தான் தீயபழக்கமும் தீயவொழுக்கமும் உண்டாகுமாதலின், அவர்களுடைய நடத்தை, பழக்

கம், ஒழுக்கம், முதலிய ஒவ்வொன்றையும்பற்றிப் பெற்றோர் கவலை எடுத்துக் கொள்வது அத்தியாவசியமா மென்க. மகவைப் பெற்றுவிடுவது கஷ்டமல்ல. அவர்களை ஒருகுறைவு மின்றி வளர்த்து நல்வழிப்படுத்திச் சான்றோனெனக் கூறும் படிசெய்வித்தலன்றோ கஷ்டம். இதுபற்றியே மகவை வளர்த் தல்பற்றி நமது மூதாதைகளும்,

" மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளும் துன்பம்
விதலைநோ யடையில் துன்பம் வியன்பரு வத்தும் துன்பம்
கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால் என்றைக்குந் துன்ப மாமால் "

எனக்கூறி யுளர். மக்கட்குத் தந்தை எவ்வாற்றானும் கசடறக் கல்வி கற்பிப்பது இன்றியமையாததாம். தந்தையில்லாவிடில் மகவு எவ்வாற்றானும் அறிவற்றதாகும். இதுபற்றியே பெரி யோர்,—

" தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்,
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
வுற்றா ருடன்போ முடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம் "

எனக்கூறினர். இது நிற்க; மக்கள், பெற்றோரிடம் நடந்து கொள்ள வேண்டியதைச் சற்று கவனிப்போம். நமது பெற்றோர் நம்மினும் மேன்மையானவர் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ள மறுக்கார். நமது பெற்றோருக்கு நாம் மரி யாதைசெய்யக் கடமைப்பட்டவர்களே; ஏனெனில், அதற் குக்காரணம் அவர்கள் நம்மினும் வயதில் முதிர்ந்தவர்கள் என்பது மாத்திரமன்று. நமது வாலிபப் பருவம்முதல் நம் மைக் காப்பாற்றக் கவலை யெடுத்துக்கொண் டிருக்கின்றனர். நமக்கு இடுக்கண் நேர்ந்துழி, உள்ளன்போடு பாடுபட்டுக் காப்பாற்றியவர்களும் அவர்களே யன்றோ? வாழ்நாட்களில் அவர்கள் நமக்கு நன்மை செய்யாத நாளுமுண்டோ? ஆகவே

நாம் அவர்கள்செய்த நன்றிக்கு என்றும் கைம்மாறு செய்யக் கடமைப் பட்டவர்களே. அங்ஙனம் செய்யாது நன்றியை மறந்தவர்க்குப் பிராயச்சித்தமே யில்லை. இதுபற்றியே பொய்யாமொழிப் புலவர்—

> " எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

எனக்கூறினர். முற்றும் துறந்த முதியோருங்கூடத் தன் பெற்றோர்க்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவரே யாவர் என்பது பெரியார்கொள்கை. இதுபற்றியே பட்டணத்தார் தான் ஞானியா யிருப்பினும், தனதன்னை, பரலோகத்திற் கேகியதை யறிந்து, உடனே சுடலைக்குத் தூக்கிச்சென்று வாழைமரங்களைக் காஷ்டமாக அடுக்கி, அதில் சவத்தைக் கிடத்தி,

> " முன்னையிட்டதீ முப்புரத்திலே
> பின்னையிட்டதீ தென்னிலங்கையில்—
> அன்னையிட்டதீ யடிவயிற்றிலே
> யானுமிட்டதீ மூள்க மூள்கவே "

எனத் தீவைத்து உத்தரக்கிரியை செய்து முடித்தனர்.

ஒருவேளை நமது பெற்றோர் கோபமுள்ளவர்களாயும் காரணமின்றித் தொந்தரை விளைவிக்கின்றவர்களாயு மிருக்கலாம். ஆயினும் நாம் அவர்களிடம் சிறிதேனும் கோபியாமல் அவர்களை மரியாதைப்படுத்த வேண்டும். ஏனெனில் புவியிற் பிறந்த மக்களாகிய நமக்குப் பெற்றோரினும் மேம்பட்டவரும் இதம்புரிவாரும் இல்லை—

> " எப்புவி களும்பு ரக்கு மீசனைத் துதிக்க வேண்டின்
> அப்பனே தாயே யென்போ மவரையே துதிக்க வேண்டின்,
> ஒப்புமை யுளதோ வேலை யுலகின்கட் புலனிற் றேன்று
> செப்பருந் தெய்வ மன்னார் சேவடி போற்றாய் நெஞ்சே !"

"மனையவள் வீயின் வேறோர் மனைவியைக் கொளலாம் பின்பு
தனையரா தியரி றப்பிற் றனித்தனி பெறலாம் பெற்ற
புனைபொருள் நீங்கின் மற்றோர் பொருளையும் பெறலா மீன்ற
அனையிறந் திடின் வேறந்த னனைவரு வாரோ நெஞ்சே."

"தந்தைதாய் பணிதல் செய்யுந் தவமலாற் றவம் வேறில்லை,
மைந்தருக் கெதிக ளேனும் வணங்குவர் தாயைத் தந்தை
அந்தமைந் தனையே போற்றல் வேண்டுமெற் றூத றன்னல்
சிந்தையுற் றுணரிற் றூயே தந்தையிற் சிறந்தாள் மன்னே!"

"தாயினிற் சிறந்த தெய்வ மிலையுயர் தந்தை தன்னின்
ஏயநற் குருவு மில்லை."

"தாய்சொற் கேட்டலுந் தந்தைசொற் கேட்டலும்
பாசத் தன்பினைப் பற்றற நீக்கலும்
ஈசற் கேகடன்."

"தந்தை யுரை தட்டினவன் றாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
வந்தமுறை வேதநெறி மாறினவர் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர்."

என்ற பெரியோர் போதனை என்றும் மறக்கற்பால தன்றாம். நாம் பெற்றோர்களுக்கு எவ்வாற்றானும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கீழ்ப்படிதலினும் இருவகையுண்டு. ஒன்று மனத்துடன் கீழ்ப்படிவது. மற்றொன்று பயத்துடன் கீழ்ப்படிவது. நமது பெற்றோர்களிடம் நாம் இவ்விருவழியிலும் கீழ்ப்படியவேண்டும். சிலவேளை அவர்கள் ஏவுந்தொழில், நம்மனத்திற் செல்லாம லிருக்கலாம்; ஆயினும் அவர்கள் நம்மிடம் ஒப்புவித்த பான்மைக்காகவாவது சிறிதேனும் முணு முணுக்காமல் அக்கட்டளைக்கடங்கி காரியத்தை முடித்தல் வேண்டும். அதுவே வீரர்களுக் கழகு. 1854-ம் வருஷத்திய கிரிமியன்யுத்தத்தில் ஆங்கில ஸேனாதிபதி ஒருவர் ஏதோ பிசகாய் ஆபத்தான ஒரு கட்

R34 1415 177054

டளையிட்டார். எந்தப் புத்திமானும் அவ்விதக்கட்டளை யிட்டிருக்கமாட்டான். அவ்விதம் பிறந்த ஓர் உத்தரவினுல் 25 நிமிஷங்களுக்குள் சுமார் 400 போர்வீரர்கள் உயிரிழக்க நேர்ந்தது. ஆயினும் அவ்வுத்தரவு தம் தலைவரிடமிருந்து வந்தமையால் வரப்போகும் ஆபத்தை நன்கறிந்திருந்தும், போர்வீரர்களனைவரும் சிறிதேனும் யோஜியாமல் முன்சென்றனர். அச்சந்தர்ப்பத்தை ஆங்கிலக் கவிராஜரான (Lord Tennyson) லார்ட் டெனிஸன் பின் வருமாறு வருணித்திருக்கிருர்.

Forward The Light Brigade !
Was there a man dismay'd !
Not tho' the Soldier knew
Some one had blundered !
Theirs not to make reply !
Theirs not to reason way,
Theirs but to do and die
Into the Valley of death
Rode the Six hundred !

இவ்விதமவர்கள் சென்று உயிரிழந்தனர். ஏன் ? தெரியாமலா ? இல்லை. உயிரையிழந்தேனும் கீழ்ப்படிதல் என்னும் குணத்தை நிறைவேற்றவேயாம். ஆகையால் நாமும் அவ்வண்ணம் பெற்ளுேர்களிடம் நடந்து கொள்ளவேண்டும். அவருக்கேனும் அல்லது பிறருக்கேனும் பயந்து கீழ்ப்படியாவிட்டாலும் சுயநலம் பாராட்டியாவது அவ்வண்ணம் செய்யவேண்டும். இல்லாவிடில் பின்பு நம்பாடும் பிதாவுக்கு ஒட்டிற் கஞ்சிவார்த்த பாதையின் போக்கையே யடையும். நாம் நன்னெறி யினின்று மாருமலிருப்பதே அவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும். தன் மகனைப்பற்றி உலகெல்

லாம் புகழின் அன்னையின் மனம் எவ்விதம் இருக்கும். இதுபற்றிப் பெரியோர்.—

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
> சான்றோனெனக் கேட்டதாய்."

எனக் கூறினர். ஆதலின், நாம் நல்வழியில் நடந்தும், அவர்களைக் கௌரப்படுத்தியும், அவர்கள் முகங்கோணாமல் நடந்தும், அவர்களுக்கு இன்பமூட்ட முயல்வோம். அப்பொழுதே அனைவரும் நம்மை மதிப்பார்கள். அப்பொழுதே "இவனைப்பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாள் கொலோ!" என்றும், "இவன்றந்தை என்னோற்றான் கொல்!" என்றும் நம்மைக் கொண்டாடுவர்.

இரகுகுலதிலகனாகிய இராமனை, மாற்றாந் தாயாகிய கைகேயி,

> " ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
> தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
> பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
> ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரசனென்றாள்."

அதனைக் கேட்டு இராகவன், சிறிதுஞ்சலிப்படையாது,

> "மன்னவன் பணியன் றாகி னும்பணி மறுப்ப னோவென்
> பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றோ
> என்னினி யுறுதி யப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
> மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையுங் [கொண்டேன்."

என்று சொல்லி விட்டுத் தன்பெற்றோர் சொல்லைத் தலைமேற் கொண்டு, தன் காதலியோடு கானகம் புகுந்தான். பஞ்சவடியில் தங்கியகாலத்துச் சூர்ப்பணகையின் தூண்டுகோலால் இராவணன் தன் மாமனாகிய மாரீசனை மாய மானுருக்கொள்ளும்படி செய்ய, அவனும் பொன் மானுருக் கொண்டு, பஞ்ச

வடி புகுந்தனன். அங்குத்தன் தோற்றத்தால் சீதாபிராட்டியாரின் மனத்தைக் கவர, அன்னளும் அதனைப் பிடித்துத் தனக்கு அளிக்குமாறு நாதனை வேண்டிக் கொண்டாள். இராமனும், அம் மானைத் தொடர, அது கையுருமைகண்டு ஓரம்பெய்து அதனை வீழ்த்தினன். மாயமா னுருக்கொண்ட அரக்கன், "ஒண்டொடீ! இளையோய்!" என்றுரைத்ததைக் கேட்டு ஜானகியார் நாதனுக்கு விபத்துற்ற தென்றெண்ணி இலக்குமணனை விடுவிக்க, அன்னன் அண்ணன் இறந்திரார் எனத்தேறுதல் சொல்ல முயன்ருன். பின்பு சினங்கொண்ட சீதாதேவி, பலவாருகத் தூஷித்ததைப் பொருமல், இளைய பெருமாளும் இராமனைத் தேடிச் சென்ருன். அவ்வமயம் அரக்கர்கோன், துறவியுருக்கொண்டு இறைவி பாற்சென்று பொருத மொழிகளைப்பேசித் தேவியை நிலத்தோடு பெயர்த்து இரதத்திலேற்றிக்கொண்டு சென்ருன். பின்னர் இராவணன் ஆகாயமார்க்கமாய்ச் சீதையைக்கொண்டு போவதைப் பார்த்து ஜடாயு பலவாறு போர்புரிந்து தன் தேகத்தை விட்டனன். பின் இராகவன் திரும்பி வந்து தேவியைக் காணுது தவித்துக் கதறிப் பலவிடங்களிலும் தேடி முடிவில் ஸுக்ரீவனிடம் நட்புக்கொண்டான். பின் ஸுக்ரீவன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக வாலியைக் கொன்ருன். பின் குரங்குகளைக் கொண்டு கடலில் அணைகட்டிக் கடலைக் கடந்து சென்று இலங்கையை எரித்தான். இராவணன் கும்பகர்ணன் முதலிய அரக்கர்களைக் கொன்று ஜானகியை மீட்டு வந்தான். ராமன் இவ்வளவு கஷ்டங்களை அநுபவித்ததற்குங் காரணம் பெற்ருேர்சொல்லைப் பூர்த்தி செய்வதற்கேயன்ருே? அன்றியும் இராகவன் அரண்ணியத்திற்குச் செல்லுங்கால் நகரவாஸிகள் செல்லக் கூடாதெனத் தடுக்கவே, அவர்களை நோக்கி—

"மகர வேலைமண் டொட்டவண் டாடுதார்ச்
சகரர் தாதை பணிதலை நின்றுதம்
புகரில் யாக்கையி னின்றுயிர் போக்கிய
நிகரின் மாப்புகல் நின்றதன் றோவெனோ?"

எனவும்,

"மான்ம றிக்கரத் தான்மழு வேந்துவான்
தான்ம றுத்திலன் றாதைசொற் றாயையே
ஊனறக் குறைத் தானுர வோனருள்
யான்ம றப்பதென் றெண்ணுவ தோவென்றான்."

எனவும், தமது பிதிர்வாக்கிய பரிபாலனம் செய்யும் பொருட்டு, சகரர் அறுபதினாயிரம்பேரும் தம்முயிர்விட்டுளர். அந்தணனான பரசுராமனும், தந்தையாகிய ஜமதக்னி சொற்கடவாமல் தாயையே சங்கரித்திருக்கிறான். நான் மட்டும் பிதாவின் வாக்கியத்தைக் கடப்பதோ எனக்கூறிச் சென்றனர்.

மாதா பிதாக்கள் பிள்ளையைப் பெறுகிற விஷயத்தில் பிரஸவவேதனை தொடங்கிக் கல்வி கற்பிக்கும் வரையினும் படும் கஷ்டங்களுக்குக் கைம்மாறு எத்தனை பிறவிகளினும் செய்வதரிதென மநுஸ்மிருதி கூறுவது மீண்டறியத்தக்கது.

நமது பெற்றோரின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய நமது சௌகரியங்கள் யாவற்றையு மிழக்கலாம். அவ்வாறிழத்தலால் நமக்குக் கௌரவமும், கீர்த்தியும், ஓங்கிவளரும். சந்தனுமஹாராஜன், சத்தியவதியை மணம் புரியவிரும்பிய பொழுது அவள் பிதா, பீஷ்மனுக்குப் பட்டத்துரிமை யிருக்கும் வரை தன்பெண்ணைச் சந்தனுவுக்குக் கொடேனெனப் புகல, தன் மைந்தனிடம் மிக்கவாஞ்சையுள்ள மன்னன், இருதலைக் கொள்ளியினிடையே அகப்பட்டுக் கொண்ட எறும்புபோல மனம்புழுங்கி ஒன்றும் சொல்ல இயலாது வருந்தும் பொழுது, அவர் குறிப்பை யறிந்து பீஷ்மர்,

"விரதமுற் றியவா தனைவருங் கேண்மின்
   மெய்யுயிர் வீடுமன் றளவும்,
சரதமுற் றியமெய்த் தாதுவு மூலத்
   தழலுடன் மீதெழுந் தகைத்தே,
இரதமுற் றியசொன் மகப்பெறு தவருக்
   கில்லையென் றியம்புநற் கதியும்,
சுரதமுற் றியவென் றந்தைதன் பொருட்டாற்
   பெறுவ லென்று"

எனப் பயங்கரமாகப் பிரதிஞ்ஞை செய்துகொண்டு ஆயுளுள்ளளவும் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டது பிதாவின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்கேயன்றோ? பிரஹ்லாதன், தன் தந்தை தன்னைப் பலவாறு இடுக்கணுக்காளாக்கியும், ஸ்ரீமந்நாராயணன் பிரத்தியக்ஷமான பொழுது அவர் உனக்கென்ன வரம்வேண்டும் எனக் கேட்க, என் தந்தை தேவரீருக்கு இழைத்த பிழைகளைப் பொறுத்து, அவரை நற்கதியடையும்படி செய்யவேண்டும் என வேண்டிக் கொண்டானேயல்லாது தன் தந்தையின் தீமையை மனத்திலும் எண்ணினனோ? அவனன்றோ புத்திரன்? அலெக்ஸாந்தர் என்னும் போர்வீரன், தன் அன்னையிடங் காட்டிய அன்பு என்றும் மெச்சத்தக்கதன்றோ? நமது பெற்றோரின் பெருமை இவ்வளவென வரையறுக்கத்தகாதது. நாம் அவர்களுக்கு எப்பொழுதும் மரியாதைசெய்வதோடு, அவர்களுக்கு இடுக்கணுற்றுழி, நமது உயிரைக் கொடுத்தேனும் காப்பது கடமையாகும். ஆதலால் பிறப்பை வீணாக்காமல் அறம், ஸத்யம், தவம், அடக்கம், நாணம், பொறுமை, கொடை, கல்வி, தைர்யம், மன்னிப்பு, பெரியோரைப் போற்றல், பெற்றோரைப் பேணல் முதலிய நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டு, காமம், கோபம், பரதந்திரமாயிருத்தல், பிறர் குற்றங்கூறல், கோட்சொல்லல், கலகஞ்செய்தல், மாத்சர்யம், ப்ராணிகளை

ஹிம்ஸித்தல், அயல்வாழப்பொருமை, எக்களிப்பு, குறும்புப் பேச்சு, அறிவின்மை, புறங்கூறல், பொய்ம்மை, நன்றிமறத் தல்,ஈயாமை, கீழ்மை, பேதைமை, பெரியோரைப் பழித்தல் முதலிய தீயவொழுக்கங்களை யொழித்து, நமக்கும் பிறர்க் கும் நன்மையுண்டாகுமாறு நடத்தலே நமக்கு இகபரசுகந் தருமென்றுணர்க.

M. M. நாராயணசாமி ஐயர்,
முடிகொண்டான்.

முற்றும்.

சுபம்.

ஸத்ய ஹரிச்சந்திரன்—பொய் சொல்லாமையையே பூஷ ணமாகப் பூண்டு தாங்கொணுத கொடிய கஷ்டங்களுக்குள் ளாய் இறுதியில் தேவர்களும் மெச்ச வெற்றி பெற்ற ஹரிச் சந்திர மஹாராஜாவின் திவ்ய சரித்திரம் நவரஸங்களுடன் கூடிய நாடகமாக எழுதப்பட்டுள்ளது. விலை அணு 6.

விலாசம்:

ஸ்ரீ பால சுப்ரமண்யம் கம்பெனி,
திருவல்லிக்கேணி,
சென்னை.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS

BOOKS INDISPENSABLE FOR EVERY LIBRARY

Works by Varakavi Thiru. A. Subramania Bharati.

வரகவி—திரு. அ. சுப்ரமண்ய பாரதியாரியற்றியவை.

ஸ்நேகலதா	0	5	0	நவநீதம்	0	3	0
மதாலஸா	0	3	0	பத்மினி	0	3	0
சுந்தரவல்லி	0	8	0	ரமணீயம்	0	4	0
ஜடாவல்லவர்	1	8	0	ஜெயலெக்ஷ்மி	0	8	0
பரதன்	0	5	0	மாளவிகாக்னிமித்ரம்	0	8	0
கற்பின்வெற்றி	0	8	0	பானுமதி	0	12	0
வனஜாக்ஷி	0	8	0	பெற்றோர் பெருமை	0	1	0
தெய்வமகிமை	0	1	0	பாலவிநோதினி	0	1	6

Works by Balasaraswathi Devakunjari Ammal

பாலஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள் இயற்றியவை.

மங்களாம்பாள்	0	8	0	விஜயலெக்ஷ்மி	0	8	0
கர்நாடக யோகினிக் கதை	0	4	0	சுப்ரமண்யர் ஸ்தோத்ரக்கொத்து	0	3	0

WORKS BY PANDIT NATESA SASTRIAR.

பண்டித நடேச சாஸ்திரியாரியற்றியவை.

தலையணைமந்திரோபதேசம்	0	8	0	திராவிட மத்யகாலக் கதைகள்	0	8	0
				தானவன்	0	12	0
திக்கற்ற இருகுழந்தைகள்	0	12	0	தீனதயாளு	0	6	0
தக்காணத்துப் பூர்வ காலக்கதைகள்	0	10	0	திராவிட பூர்வகாலக் கதைகள்	0	8	0

MISCELLANEOUS WORKS.

இதரப் புத்தகங்கள்.

				புத்திமானே பலவான்	0	8	0
பத்மாஸனி அல்லது துப்பறியும் கன்னிகை	0	10	0	ஞானம்பாள்	0	6	0
				ஸத்யஹரிச்சந்திரன்	0	6	0
பக்திசந்திரிகா (ஸ்ரீமதி)	0	1	6	ஸிம்ஹளநாதன்	0	12	0
ஹேமலதா (நாடகம்)	1	0	0	புஷ்பவல்லி	0	12	0
ஹேமலதை (காவல்)	1	4	0	வள்ளிபரிணயம்	0	8	0
கௌரீமணி	0	3	0	சுந்தரேசன்	1	0	0

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

எமது சொந்தப் பிரசுரங்கள்.

நாவல்கள்.

ஜடாவல்லவர் ராப்பர்	1	8	0
,, காலிகோ	1	10	0
மங்களாம்பாள்	0	8	0
சுந்தரவல்லி	0	8	0
பாலவிநோதினி	0	1	6
* பரதன் ராப்பர்	0	5	0
,, காலிகோ கில்டு	0	8	0
* புத்திமானேபலவான்	0	8	0
* யோகினிக்கதைகள் (**Fairy Tales**)	0	4	0
* பக்திசந்திரிகா (ஸ்ரீமதி)	0	1	6
பத்மாஸனி (துப்பறியும் கன்னிகை)	0	10	0

நாடகங்கள்.

கீசகன் அல்லது கற்பின் வெற்றி	0	8	0
சத்ய ஹரிச்சந்திரன்	0	6	0

வியாசங்கள்.

பெற்ரோர் பெருமை	0	1	0
தெய்வபக்திமை	0	1	0
பெற்ரோரும் பிள்ளைகளும்	0	1	0

சூதசங்கிதா சாராமிருதவசனம்	1	0	0
சுப்ரமண்யர் தோத்திரக்கொத்து	0	3	0
திருச்செந்தூர் வெண்பாவந்தாதி	0	1	0
தெய்வகுஞ்சரி அம்மன் திருமணக்கும்மி	0	1	0

விலாசம்:—

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் அண்டு கம்பெனி.,

திருவல்லிக்கேணி, சென்னை.

---

* துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு கலாசாலைகளில் பாடமாக உபயோகிக்கப்பட்டு வருவன.